**செய்தி வெளியீடு எண் : 878** **நாள்: 01.06.2022**

## செய்தி வெளியீடு

**தென்மேற்கு பருவமழை குறித்த ஆயத்த பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (01.06.2022) தலைமை செயலகத்தில் சம்மந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள் :**

- பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் பொருட்டு, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், குறிப்பாக பாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால்களில் உள்ள அடைப்புகளை அகற்ற வேண்டும்மெனவும் ஏரி மற்றும் குளங்களின் கரைகளை பலப்படுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.
- மேலும், வடிகால்கள் மற்றும் ஏரி குளங்களை தூர்வார நிலையான வழிகாட்டு நடைமுறைகளை தயாரிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது.
- பாவெள்ள அக்காலத்தின் போது அனைத்து துறைகளும் உபரி நீரினை வெளியேற்றும் பணியில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அதே நேரத்தில் ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கூடுதலாக நீரினை தேக்கி வைக்க கூடிய கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் வெள்ள அபாயத்தை தடுக்க வலியுறுத்தப்பட்டது.
- வெள்ள காலங்களில் ஆற்று முகத்துவாரங்களை அகலப்படுத்ததுவதன் மூலம் வெள்ள நீர் எளிதாக கடலைச்சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.
- நீர் வழி பாலங்களை தூர்வாருதல் போன்ற உடனடி தேவைகளை அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- நீர் வழிகளின் கரைகளை பலப்படுத்த போதுமான மணல் மூட்டைகளை இருப்பு வைத்தல் வேண்டும்.
- சமுதாய உணவு கூடங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- வெள்ளக்காலங்களில் பாதிக்கப்படக்கூடிய அனைவருக்கும் போதுமான உணவு பொட்டலங்கள் தங்கு தடையின்றி வழங்குவதை உறுதி செய்ய ஏதுவாக தேவையான அத்தியாவசிய உணவு பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- முறையான திடக்கழிவு மேலாண்மை மற்றும் ஆகாயத்தாமரை அகற்றுதல் மூலம் நீர்வழி தடங்களில் ஏற்படும் அடைப்பு குறைக்கப்பட்டு வெள்ள அபாயம் தடுக்கப்பட வேண்டும்.
- பேரிடர் பயிற்சி ஒத்திகைகள் முழுவீச்சில் நடைபெற வேண்டும்.

- வெள்ள நீரை வெளியேற்றும் பம்பு செட்டுகள் மற்றும் பிற உபகரணங்களின் செயல்பாடுகள் முன்னரே பரிசோதித்து தயார் நிலையில் வைக்க வேண்டும்.
- மழை மற்றும் வெள்ள காலாங்களில் ஏற்படும் தொற்று நோய் குறித்து சுகாதாரத்துறை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.
- வெள்ள காலங்களில் கால்நடைகளை கட்டி வைத்திருப்பதை தவிர்க்கும்படி சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கால்நடை பராமரிப்பு துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.
- வெள்ள காலத்தில் பொது மக்களை வெளியேற்றும் போது தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் மீட்பு பணி நடவடிக்கைகளில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- புயல் பாதுகாப்பு நிவாரண மையங்கள் மற்றும் கூடுதல் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.
- புயல் பாதுகாப்பு மையங்களில் முகக்கவசம், தனிமனித இடைவெளி மற்றும் தடுப்பூசி செலுத்தியுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
- பேரிடர்க்கு பின்பு மீட்பு பணிகளில் ஈடுபடும் திறமையான குழுக்களை அனைத்துறைகளும் கண்டறிந்து தயார் நிலையில் வைத்து இருக்க வேண்டும்.
- அணைக்கட்டுகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும்.
- மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

எதிர்வரும் தென்மேற்கு பருவமழைக் காலத்தில், பேரிடர்களின் சவால்களை திறம்பட எதிர்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறுத் துறை செயலாளர்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள், இராணுவம், விமானப்படை, கப்பற்படை, கடலோர காவல்படை, இந்திய வானிலை ஆய்வு மையம், ஒன்றிய நீர்வள ஆணையம், தேசிய பேரிடர் மீட்புபடை உள்ளிட்ட ஒன்றிய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in